124

பதிவு எண் — M. 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

1 JAN 1956

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு.- சான்றாண்மை இதழ்.

124
1-56

ஆசிரியர்: இளவழகனார்.

கிளை—8 குருகுலம், மாம்பாக்கம்; மன்மத, கார்த்திகை, ௨ 18—11—55 தளிர்—4

திருவள்ளுவர் செய்தி – 3

குருகுலத்தார்க்கு

உலகம் உய்ய அங்கங்கும் பெரியோர் உதவி செய்கின்றனர். தக்க துணை தக்கார்தாம்; சான்றோர் இனத்திருப்பது மிக்க பாதுகாப்பு. மக்களில் சான்றோராய் உயர்ந்தவர்கள், மற்றவர்களும் தம்போல் மேம்படுவதற்கே பாடுபடுகின்றனர். "நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்"; "என் கடன் பணி செய்து கிடப்பதே"; இவை அவர்கள் கொள்கைகள்!

இயல்பாகவும், எளிதாகவும் கிடைக்கும் இப் பெரியோர் துணையை மக்கள் அறிந்துகொள்ளாமலும் பொருள் செய்யாமலும் நிலைகுலைந்து போகின்றனர். இவர்களுக்காக அப் பெரியோர் மிகவும் இரக்கம் கொள்கின்றனர்.

பெரியோர் துணையின்றி எவரும் நல்வாழ்க்கை பெற இயலாது. சான்றோர் துணையுடன் வாழ்க்கை நடத்துதல், போதிய முதலுடன் தொழில் நடத்துவதைப் போல் ஆக்கமாய் இருக்கும்.

மக்களில் பெருமை உடையவர்களையே பெரியோர் என்று சொல்வர். அந்தப் பெருமை அவர்களுக்கு நல்லொழுக்கத்தாலும் உலகத்திற் பற்றின்றிக் கடமைகள் மேற்கொள்வதனாலும் உண்டாகின்றது; எல்லா நூல்களும் சான்றோர் பெருமையை முதலில் விரும்பும்.

அவர் பெருமைக்கு நிகரானது உலகில் ஒன்றுமில்லை; அவர் பெருமையை அளந்து காணவும் மற்றவர்களுக்கு இயலாது.

பெரியோர், ஆற்றல் உள்ள மனிதர்களாக விளங்குகிறார்கள். அதற்குக் காரணம் இப் பிறப்பின் நோக்கம் மட்டும் அல்லாமல் வரும் பிறப்புக்களின் ஆக்கமும் கருதி முன் விழிப்பாய் இங்கே கடமைகளை மேற்கொள்ளுதல் ஒன்று; காணப்படுகின்ற உலகத்தின் பொருள் வகைகளைத் தெளிய அறிந்தும், நடை முறையில் பொறி புலன்களாகிய உடம்பின் கருவிகளை ஒழுங்காக அடக்கி ஆண்டும் நடந்துகொள்ளுதல் மற்றொன்று; இப்படி இருந்தால் எல்லாருமே ஆற்றல் பெறலாம்.

பெரியோர் ஆற்றலுக்கு இரண்டு அடையாளங்கள் உள்ளன. ஒன்று இயற்கையாய் நிகழ்வது. பெரியோர் வல்லமையின் இயற்கை விளைவு மழை; செயற்கை நிகழ்ச்சி அரிய பெரிய செய்கைகள்!

நாட்டில் பெரியவர்கள் இல்லையென்றால் மழையும் இல்லை, அரும் செயல்களும் இல்லை! இரண்டும் இல்லையானால், உலகத்தில் நல் வாழ்க்கை ஏது?

பெரியவர்களின் கருணையால் கடமையால் எவ்வுயிர்க்கும் செந்தண்மை உண்டாவதனால், அத்தகைய மேன்மக்களை அறிந்து துணைபற்றி உய்தல் நாட்டுக்கு எவ்வளவு முதன்மை! சான்றோர் இனத்திருக்க மக்கள் பழகிக் கொள்வார்களாக!

"ஆ"

அருட்பெருஞ் சோதி அகவல் பேருரை

உரையாசிரியர்: இளவழகனார்.

அகவல் மாட்சி:

வள்ளலார் திருவருட்பாவில், தலைமணி போல விளங்குவது அருட்பெருஞ்சோதி அகவல். அது "ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ் சோதி"யின் அருமை பெருமைகளையும், எளிமை இனிமைகளையும் விஞ்ஞான வழியிலும் மெய்ஞ்ஞான நிலையிலும் பலபடியாக விரித்து விரித்து விளக்குகின்றது.

பேருரை முயற்சி:

அருட்பெருஞ் சோதி அகவலை முறையாகப் பலர் குருவாரந்தோறும் திருவடிப் புகழ்ச்சியுடன் பாராயணமாக ஓதிவருகிறார்கள்; அது மேலு மேலும் சிறக்கும் பொருட்டு அகவலுக்கு விளக்கவுரை வெளியிடும் முயற்சியும் திருவருளால் இப்போது மாம்பாக்கம் குருகுலத்தில் (மதுராந்தகம் அஞ்சல்) மேற்கொள்ளப்பெற்றிருக்கிறது!

வெளியீட்டு வகை:

அகவல் விளக்கங்கள் பகுதி பகுதியாக மாதம் ஒன்றுக்குக் கிரவுன் 32-பக்கங்கள் அளவில் வெளிவருகின்றன. ஓர் ஆண்டுக்கு இப்படி 12 பகுதிகள் கிடைக்கும்.

முதல் பகுதி, வள்ளலார் பிறந்த நாள் புரட்டாசி 30 (16-10-55)-ல் வடலூரில் வெளியிடப்பெற்றது.

ஆர்வமுடையோர் தம் பெயரை, உரிய முகவரியுடன், சேர்க்கைக் கட்டணம் ரூபா 2; ஆண்டுக் கையொப்பம் ரூபா 3; ஆக ரூபா 5-(ரூபா ஐந்து மட்டும்) செலுத்தி, குருகுலத்திற் பதிவு செய்துகொள்வார்களாக! இவ்வாறு பெயர்ப் பதிவு செய்துகொள்ளாதவர்க்கு இவை கிடைக்கமாட்டா. ஒரு பகுதி பெறுவோர் எல்லாப் பகுதிகளும் பெறுதற்குரியர்; ஆதலின் சேர்க்கைக் கட்டணம் உண்டு; அது, அஞ்சற் செலவுக்குக் கணக்கீடு செய்யப்படும்.

பெயர்ப் பதிவுக்கு:

சென்னையில்:	மாம்பாக்கத்தில்:
திரு. ஆறுமுகம் அவர்கள்,	குருகுலம், மாம்பாக்கம்;
31. முல்லா சாயபு தெரு,	மதுராந்தகம் (அஞ்.)

காக்கை காட்டும் வழி

நாள்தோறும் நம் வீட்டைச் சுற்றிக் "கா கா" என்று காதடைக்கக் கத்தும் காக்கையின் வாழ்க்கையிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய தொன்றுண்டு என்று கூறுகின்றார் திருவள்ளுவர். உண்ணத் தகுந்த பொருள் ஒன்று கிடைத்தால் அதைத் தன்னந் தனியாகத் தின்னும் சிறுமை காக்கையிடம் இல்லை. உடனே குரல் கொடுத்து, தன் இனத்தை அவ்விடத்திற்கு அழைக்கும். வந்த காகங்களோடு கலந்து உண்ணும். இந்த உண்மையைத் திருக்குறளிலே எடுத்து உரைக்கின்றார் திருவள்ளுவர். இவ்வுலகில் உண்ணும் பொருள் எல்லார்க்கும் பொதுவுடைமை என்ற உண்மையைத் தன் வாழ்க்கையால் உணர்த்துகின்றது காக்கை. இவ்வாறு காக்கையார் காட்டும் நல்ல வழியைக் கடைப்பிடிப்பது, வாழும் மக்களுக்கே ஆக்கம் உண்டாக்கும் என்று கூறுகின்றார் திருவள்ளுவர்.

காக்கை கருநிறம் உடையது என்று கற்றவரும் மற்றவரும் கருதியிருந்தார்கள். ஆனால் இப்பொழுது வெள்ளைக் காக்கையும் உண்டு என்று தெரிகின்றது. திருவண்ணாமலையின் அருகே உள்ள சிற்றூரிலிருந்து வெள்ளைக் காக்கை ஒன்று இக் கண்காட்சிச் சாலைக்கு விருந்தாக வந்திருக்கின்றது. அதற்கு நல்வரவு கூறுகின்றோம். வெள்ளைக் காக்கையை இல் பொருளுக்கு எடுத்துக் காட்டாக இதுகாறும் சொல்லி வந்த இலக்கண ஆசிரியர்கள் தம் கருத்தை இனி மாற்றிக் கொள்ள வேண்டும் என்று கண்காட்சிச் சாலையிலுள்ள காக்கை கற்பிக்கின்றது.

(சென்னைச் சிற்றுயிர்க் காட்சிச் சாலை நூற்றாண்டு விழாவில் திரு. சேதுப் பிள்ளை யவர்கள் உரை.)

'சு'

Phone 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட் மார்க்

ELEPHANT KISAN

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்,
53, கிடங்குத் தெரு. சென்னை 1.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்.)

காவலின் பொருட்டு, ஆட்சி, தனக்குத் துணை பற்பலவும் அவற்றின் அலுவல்கள் பற்பலவும் பெற்றிருக்கக்கூடும்; ஆயினும் அதன் நோக்கம் 'அறங்காவல்' என்பது ஒன்றேயாம்.

ஆட்சியின் நோக்கமும் செயலும் இவ்வாறு காவல் ஒன்றையே பற்றியதாய் இருந்தால், குடிமக்கள், உணவு உடை நிழல் அறிவு உணர்வு நாகரிகம் கலை வாழ்வு முதலிய தம் கடமைகள் மேல் கருத்தாய் இருக்கும் பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர்! வாழ்வது மக்கள்; மக்களுக்காகவே அரசு; முறைமைகளுக்காக அரசினை மக்கள் அமைத்துக் கொள்கின்றனர்.

குடிமக்கள், வகையான வாழ்வின் மேல் கருத்தும் பொறுப்பும் முயற்சியும் இல்லாமலிருந்தால், அவர்களுக்கு வாழ்க்கைக்குரிய கருத்துக்களை இயக்கிக் கொடுத்து ஊக்கம் உண்டாக்கி ஆற்றலும் செய்கை வீரமும் உள்ள நன்மக்களாய்த் திகழச் செய்யும் பொறுப்பு. சான்றோருடையது! சான்றோர், நாடுமுழுதும் உலவிக், குடிமக்களுக்கும் அரசினர்க்குமின்றியமையாத அறிவுரைகளை அவ்வப்போதும் வழங்கி, அவரவர் கடமைகளில் அவரவரை ஆற்றலோடும் ஒழுங்கோடும் நடக்குமாறு இயக்கி வருதலையே கடமையாகக் கொண்டிருப்பர்.

ஆகவே இயக்கம் என்பது சான்றோர் நடத்துதற்குரியது; அரசினர் முதலிய ஏனோர்க்கு அதில் தொடர்புமில்லை, வாய்ப்புமில்லை என்பது தெளிவாம். எனவே, அரசியல் இயக்கம் முதலிய பல்வேறியக்கங்கள் இந் நாட்டின் பண்புக்குரியனவல்ல; அமைதி விளைப்பனவும் அல்ல; இவை பலவும் அயலவர் தொடர்பால் விளைந்தவை; நாட்டைக் குழப்பிக்கொண் டிருக்கின்றன.

சான்றோர்பால், அரசும் நாடும் மதிப்புவைத்து அவர் வழியில் ஒழுக விரும்புங் காலமே நாடு நலமும் அமைதியும் அடையுங் காலமாகும்.

'இக்காலம் அரசியல் தலைவர்களுக்கே நாட்டில் மதிப்பிருக்கிறது; இன்னும் சிலகாலம் இருக்கும், அதன் பின் எப்படியோ' என்று 'ராஜாஜி' அவர்கள் அண்மையில் ஒரு கூட்டத்தில் தெரிவித்தமை இங்கு நினைவு கூர்தற்குரியது.

ஐவகை வாழ்வியல்

சொல்லும் பொருளுமாய் இருப்பது 'மொழி' என்று சொல்லப்படுகின்றது. எழுத்து சொல் பொருள் என்னும் இலக்கண அதிகாரங்கள் அதற்கு உண்டு.

மொழிப் பயிற்சி, பொதுவாக அதில் இட்டு எழுதப்பட்டிருக்கும் கருத்துக்களைக் கொண்டு ஓரளவு அறிவு விளக்கம் உண்டாக்கும். இதைக் 'கல்வி' என்பர்.

அறிவு விளக்கத்தோடு அன்பு இரக்கம் முதலிய உணர்ச்சிகளையும் உண்டாக்கும் இயைபுகள் 'கலை' என்று சொல்லப் பெறும்.

உணர்ச்சி, உலகப் பொருள்களைப் பற்றிய கருத்துகளின் மேல் உண்டானால், அது 'பொருட் கலை' (Science) என்றும், அவற்றின் அழகியல்மேல் உண்டானால் 'அழகு கலை (Arts) என்றும் கூறுவர். உணர்ச்சிச் சிறப்பு அழகு கலையிலேதான் மிகுதி.

பொருள் நூல், உயிர்நூல், செடி நூல், வான் நூல், கோள் நூல் முதலிய பல பிரிவுகள் 'பொருட் கலை'யின் பாகுபாடுகள்; செய்யுள், இசை, நாடகம், ஓவியம், சிற்பம் முதலிய பல பிரிவுகள் அழகு கலையின் பாகுபாடுகள்! ''நூல் பல கல்'' என்றது, கலைகள் இங்ஙனம் பலவாதல் கருதியே.

நெஞ்சையள்ளும் சிறப்புத் திறம் 'கலை 'எனப்படுதலின், அதற்குப் பொருட் கலைகளை விட அழகுகலைகளே சிறப்பாகக் கருதப்படும்.

ஆயினும், கலைப்பகுதி என்னும் பிரிவில், முல்லைக்கொடி, இவ்விருவகைக் கலைகளையுமே பெரும்பாலும் திருக்குறள் மறையூடு படர்ந்து ஏற்றுச் செழித்து வரும்.

பொதுக் கல்வி என்னும் அறிவு விளக்கத்திற்குரிய செய்திகள், மொழிப் பகுதியில் இணைந்து வரும்.

பொருட் கலைகளின் பயிற்சியினால் தொழிற் பழக்கம் பெருகும். அழகு கலைகளின் உணர்ச்சியினால் அருள் நினைவு தோன்றும்.

தொழிற் பழக்கத்தால் நாட்டுக்குவளம் உண்டாகும். அருட் பழக்கத்தால் நாட்டில் நற் பணிகள் நிகழும்.

அதனாலேதான், தொழிற் பகுதி, அருட் பகுதி, பணிப் பகுதி என்பனவும் முல்லைக் கொடியில் வருகின்றன. மக்களாய்ப் பிறந்தார், இங்ஙனம் மொழி, கலை, தொழில், அருள், பணிஎன்னும் ஐவகை வாழ்வியலிலும் ஒருங்கே திறமையுள்ளவராய், ஆற்றலுள்ளவராய், நாட்டுக்குத் தூண் போன்றவராய்த் திகழவேண்டுமென்பது, குருகுலத்தின் கொள்கை. முல்லைக் கொடியின் அவ்வப்பகுதியில் அவ்வப் பொருள்கள் பெரும்பாலும் திருக்குறளை அடிப்படையாகக் கொண்டே கிழமைதோறும் வரும்.

கலைகளில் முதலில் நமக்குத் தெரிவது அழகு கலை; அதன் பின்புதான், அந்த அழகினை ஏற்று நிற்கும் பொருட் பிரிவுகள் அறியப்படுகின்றன.

அந்த அழகியலிலும், முதலில் உயிர்களின் அழகியலும் அதன்பின் ஏனை உலகப் பொருளின் அழகியலும் உணர்வுக்கு வருகின்றன.

ஆதலால், அழகு கலையிலும், ஓரறிவு உயிராகிய மரஞ் செடி கொடிகளின் அழகியல்புகளை முதலிற் காண்போம்.

ஒழுங்கான உணர்ச்சிகளையும் செயல்களையும் பாட்டாக்குவர் செந்நாப் புலவராகிய சான்றோர்! எழுத்தும் சொல்லும் பொருளுமாய் அமையும் அப் பாட்டழகுக்குத் திருவள்ளுவர் நூல் ஓர் எடுத்துக் காட்டு!

—சீத்தலைச் சாத்தனார்.

சீந்திற் கொடியின் சாற்றிலிருந்து எடுக்கப்படும் சர்க்கரையும் நறுக்கிய சுக்கும் தேனுங் கலந்து மோந் தால், தலைக்குத்துத் தீரும்; அதைப்போல் அறமும் பொருளும் இன்பமும்கலந்த முப்பால் தொகுதியாகிய திருக்குறளை அறிந்து, சாத்தனார் தலைவலியும் தீர்ந்தது;

நாட்டில் தோன்றுகின்ற பிழைமலிந்த நூல் களால் சாத்தனார்க்குத் தலைவலி உண்டாயிற்று; பிழையற்ற நலமலிந்த தமிழ் மறையாகிய திருக் குறள் தோன்றிய பின்பே அவர்க்கிருந்த தலைக்குத்து நீங்கியது.

வாழ்க்கைக்கு நேர்மையான வழியுதவி மக்கள் முயற்சிகளை எளிமையும் இனிமையும் அமைதியும் உண்டாக நடத்துவது திருக்குறள்! பெரும்பாலான நூல்கள் அப்படி இருப்பதில்லை; வாழ்க்கையிற் சிக் கலையும் பகை கவலை துன்பம் முதலியவற்றை யும் உண்டாக்கி வாழ்க்கையை ஒரு சுமையாக்கிவிடு கின்றன. இதனால் சாத்தனார் மிகவுங் கவலையுற்று மூளை நோக்காடு கொண்டு எந்நேரமும் தலைக்குத்து உடையவரானார். திருக்குறளால், அவர் அமைதியும் இன்பமும் உற்றார்.

நல்ல நூல்களைக் கற்பதனுல், அறிவின்பமும் மனவமைதியும், வாழ்க்கை உயர்வும், நோய்த் தீர்வும், தனிப்பட்டவர்க்கும் மன்பதைக்கும் உண்டாதலுண்டு. வள்ளுவர் முப்பால் நூல், அத்தகைய அருமருந்து! மருத்துவனுகிய எனக்கு இந்த அருமை தெரியும்.

—மருத்துவன் தாமோதரனுர்.

தாமரைப் பொய்கையில் இறங்கி நன்ருக நீராடுவோர்க்கு நாவறட்சி தணிதல் இயற்கை; அது வியப்பன்று; அதுபோல, வள்ளுவர் திருக்குறளில் முற்றுந் திளைத்து இன்புறுவோர்க்கு, அதனில் ஒரு குறளை எடுத்து ஆராயும் அறிவு வேட்கை அடங்கிவிடும்.

திருக்குறள் ஆராய்தற்குமட்டும்உரிய நூலன்று; அப்படியே நுகர்ந்து இன்புறுதற்குரிய நூல்! அதன் வழியே மக்கள் வாழ்ந்து பயன் கொள்ளுதற்குரியர்!

தாமரைப் பொய்கை, குளிர்ச்சி சுவை மணம் காட்சி இசை என்னும் ஐம்புலன் இன்பமும் ஆருவது உணர்வின்பமும் பயந்து, காலையில் தாமரையின் மலர்ச்சிக்குக் காரணமாகிய கதிரொளியின் நுண்ணிய நலந் தெளியுந் தெளிவின்பமும் பெருக்கும். அதனுல் தாமரைப் பொய்கையின் நீராடலை அனைவரும் விரும்புவர்; வேறு நீரை விரும்பாது போதல் இயல்பே;அதிலும் வியப்பில்லை; அப்படியே ஐம்புலன் இன்பமும் ஆருவது அறிவின்பமும் உடைய உலகியல் வாழ்வுந் தந்து, உலகின் நடைமுறைக்கு மூல காரணமாகிய ஓர் அருளொளியின் மாட்சியுந் தெளியும் அரு

ளின்பமும் திருக்குறள் தருதலால், அதனைக் குடைந்து கற்று நலந் துய்ப்போர் வேறு நூலை விரும்புவதில்லை; இயல்புதான் அது; வியப்பொன்றும் இல்லை.

திருக்குறள் அத்தகைய உயர்ந்த மறைநூல்!

நீரின் அளவுக் கேற்றபடி தாமரை நாளம் உயர்வது இயல்பு; திருக்குறளின் பொருள் நீர்மைக்குத் தக்கபடி அதனிற் படிவார் உள்ளத் தாமரையும் உயர்வது திண்ணம்; தாமரைப் பொய்கையில் நீராடுவார்க்கு இவ்வுணர்ச்சி வளர்ச்சியும் உண்டு. உயர்ந்த நூலைக் கற்று அதற்கேற்றபடி உள்ளம் உயர்வு பெறவும் உணர்வு மலரவும் விரும்பினல், திருக்குறள் மறையில் மக்கள் திளைத்தற்குரியர்.

—நாகன் தேவனார்.

கற்கவேண்டிய கருத்துகள், வாழ்க்கைக்கு உறுதிப் பொருள்களாகிய அறம் பொருள் இன்பம் வீடு என்பன. எல்லாம் இந் நான்கினுள் அடங்கிவிடும்.

இந் நான்கைப் பற்றிய கருத்துக்கள் பற்பல வகையாய் நூல்களில் வழக்கில் சிதறிக் கிடக்கின்றன; மறைந்தும் தெளிவின்றியும் உள்ளன; பல உண்மைகள் கருத்து வரையறையின்றியும் இருக்கின்றன.

அறம் முதலிய நான்குமே வாழ்க்கைக்கு மிகவும் முக்கியம்; ‘கற்க கசடறக் கற்பவை’ என்று குறிப்பிடப்பட்டவை இவை. ஆனல், இவற்றைப் பற்றி உலகுமுழுதும், ஒரு நூல்கூட வகையாய் இல்லை;

கணக்கான ஆண்டுகளாக எதிரின்றி ஆட்சி புரிந்து வந்த பெருமையுடையது. சேர சோழ பாண்டிய மன்னர் அவற்றை ஆண்டுவந்தனர். ஆட்சி முறையில் இப் பாகுபாடு இருந்தாலும், 'தமிழ்' என்னும் உணர்ச்சிவகையில் இம் மூவரும் ஒருவரே, தமிழரே; இம் மூவர் நிலமும் தமிழகமே!

உணர்ச்சியால் ஒருவராயும் ஆட்சியால் இவர் மூவராயும் விளங்கும் இயல்பமைந்தது தமிழ் நாடு! என்ன வியப்பு! 'தமிழ்' என்பதனால் ஒரே நூலாகவும், அதிகாரப் பகுப்பால் அறத்துப் பால் பொருட் பால் இன்பப் பால் என்னும் முப்பாலாகவும் திகழும் ஒரு தமிழ்மறை இந் நாட்டில் எழுந்ததே!

அரிய பெரிய இவ் வேத நூலை அரசர்கள் தம் திருமுடிக்குத் தமிழ் மாலையாக அணிந்து பெருமையுற்று மகிழ்ந்தனர்.

சேர சோழ பாண்டியர் என்னும் மூவகைத் தமிழரசரும் தமக்கென்று மும்மலையும் முந்நாடும் முவ்வாறும் முந்நகரும் மும்முரசும் முத்தமிழும் முக்கொடியும் முக்குதிரையும், அப்படியே திருக்குறள் முப்பால் நூலும் தனிச் சிறப்பாய் உடையவரே!

முத்தமிழில், இயல் சேரற்கும், இசை சோழற்கும், நாடகம் பாண்டியற்கும் சிறப்பின் அமைந்தவை; அவ்வாறே முப்பாலில் அறம் பொருள் இன்பம் மூன்றும் மூவரசர்க்கும் முறையே தனிச் சிறப்பின் அமைந்தவை எனலாம்.

திரிபு அற, வகையாக அருளிச் செய்கின்றார். அவரை மனிதருள் ஒருவராகக் கருதலாகாது. அவரைத் தெய்வ உருவென்றே உயர்ந்தோர் கொள்வர். வள்ளுவர் என்று அவர்க்குப் பெயர் இருப்பதைக் கொண்டு, மறந்தும் ஒரு மனிதராகக் கருதுதல் இயலாது. அப்படிக் கூறுவோன் இருந்தால் அவன் ஒரு பேதை; அவன் வாய்ச் சொல்லை அறிஞர் ஒரு பொருளாகக் கொள்ளார்.

—மாமூலனார்.

அடிப்படை உண்மைகளைத் தெளிவாக அறிந்து, குறிக்கோள் கொண்டு, ஏற்ற நெறிமுறையில், வாழ்க்கை இயங்கவேண்டும்; சமய நூல்கள் இதற்குத் துணை செய்யவே தோன்றின; பொதுவாக நம் நாட்டுச் சமயக் கொள்கைகளில் ஆறு பிரிவுகள் உண்டு. ஆனால், ஒவ்வொரு சமயமும், பற்றும் வெறியும் இடையிடையே கொண்டு, கருத்தொருமையும் இணக்க முறைமையும் தெளியாமல், 'வேறு' என்று வேறுபட்டும், 'அன்று' என்று மாறுபட்டும், பேசுகின்றன. ஆயினும், திருவள்ளுவர் அருளும் திருக்குறளை மட்டும் எப் பிரிவினரும் 'நன்று' என்று ஒப்புக் கொள்ளுகின்றனர். இப்படிப் பொது உண்மைகளாகிய அறம் பொருள் இன்பங்களைக் கூறும் திருக்குறள், எல்லாரும் ஒப்புக் கொள்ளக் கூடிய ஒரு பொது மறையாகத் திகழ்கின்றது.

—கல்லாடர்.

தமிழ் நாடு ஒரு வியப்பு மிக்க சிறப்பமைந்தது. அது மூன்று நாடாக வகைப்பட்டுப் பல ஆயிரக்

தெளிவான, நிறைவான, அளவான நூல், அனைவராலும் மதிக்கத்தக்க ஒப்புக்கொள்ளத் தக்க நூல் ஒன்றுகூட இல்லையென்றால் உலகம் தகுதியான நெறி கொண்டு உய்வது எப்படி?

இப் பெருங்குறையை நிறைவு செய்யவே உலகுக்கு ஒரு நூலாகத் திருக்குறள் மறை எழுந்தது!

கருத்துக்களெல்லாம் அங்கங்கும் சிதறுண்டு கிடத்தலால் உலகம் தடுமாறுதலைத் திருவள்ளுவர் கண்டார், இவைதாம் மெய்ப்பொருள்கள் என்று வேறு பிரித்துத் தொகுத்து, பொருந்த வகைப் படுத்தி, விரிவாகவும் விளக்கமாகவும் அளவான சொற்களால் ஒரே நூலாக அருளிச் செய்தார். இப்படிச் சொல்ல வல்லவர், சொல்லிய வல்லவர், வள்ளுவர் அல்லால் வேறு யார் இருக்கின்றனர்!

—அரிசில் கிழார்.

முன்னே காசிபர் என்னும் பெரியவர் விரும்பியபடி, நெடுமால் குறள்வடிவு கொண்டு, மண்ணில் நின்று, மூவுலகையும் அளந்தார் என்று கூறுவதுண்டு; ஆனால், திருவள்ளுவர் விரும்பியியற்றிய குறள், வானமும் இல்லாமல் மண்ணும் இல்லாமல் ஒழுங்கு முறையோடு எல்லா அறிவு உணர்வு உலகங்களையும் அளந்துவிட்டதே!

மேலும், நெடுமால் குறள்வடிவில் வந்தது; பின்பு நெடுவடிவில் நிமிர்த்தது; அந் நெடு வடிவால் அளந்தது; திருக்குறளோ, குறள் வடிவில் நின்றே எல்லாம் அளந்ததே!

நெடுமால் குறள்வடிவு கொண்டது வஞ்சனை, பின் நெடுவடிவில் நிமிர்ந்ததும் வஞ்சனை; நேர்மையில்லை; ஏனோ அப்படியாயிற்று; திருக்குறள் நூல், வஞ்சித்து வந்த குறள்வடிவன்று; பின் வஞ்சித்து நிமிர்ந்த நெடுவடிவுங் கொள்ள வில்லை; நூல் போல் நேர்மையும் முறைமையும் உடையது.

மாயவன் குறள் வடிவம், அருவருப்புடையது; பின் எடுத்த நெடுவடிவம் அச்சமுடையது; திருக்குறளின் சிறுவடிவம் இயல்பான குழந்தை வடிவம்; எளிமையும் இனிமையுமாய் உலகில் விளையாடி, எல்லாரையும் வஞ்சியாது இன்புறுத்தி வருகின்றது.

மாலவன் எடுத்த குறள்வடிவு, உருவமாகிய வரிவடிவு. ஆனால் திருக்குறள் எடுத்த குறள்வடிவோ வரிவடிவும் ஒலிவடிவும் உடையது. வரிவடிவு மண்ணின் சார்பில் நிற்பது; ஒலி, வானின் நிகழ்ச்சி; வானில் நிற்பது. ஆதலால், வரி ஒலி என்னும் இரண்டு வடிவங்களும் ஒருங்கே உடைய திருக்குறள் மண்ணில் நின்றும் வானில் நின்றும் இயங்க வல்லது.

திருமாலின் குறள் வடிவு மறைந்து விட்டது போல் திருக்குறள் மறைந்து விடுதலுமில்லை, மாறி விடுதலு மில்லை; என்றும் அழியாது நின்று உதவும் இனிமையும் எழிலும் அமைந்தது; வரி வடிவில் மண்ணில் நிலைத்து நின்றும், ஒலி வடிவில் விண்ணில் நிலைத்து நின்றும் எல்லாருள்ளங்களையும் காண வல்லது!

திருவள்ளுவர் குறள், உலகை, நூல் ஒழுங்குடன் அளந்தது; திருமாலின் குறள் வடிவு அளந்தது,

இத்தகைய பெரிய நூலைத் தமிழ், உலகுக்குத் தந்தது, தமிழுக்கு அப் பண்பினிமை இருக்கின்றது!

மேலும், களங்கமற்றதும், கட்டுத் திட்டமானதும், நேர்மையுடையதும், சுருங்கிய வடிவமைந்தது மான வெண்குறள் யாப்பில் அது, அமைந்திருப்பது வியப்பிற்குரியது; இலக்கிய அழகிற்குரியது. மக்கள் தம் கையாலும் நெஞ்சாலும் பழகிக் கையாளுவதற்கு மிகவும் எளியது.

அதுமட்டுமா? வாழ்க்கையின் அடிப்படைப் பகுதிகளும் தேவைகளுமாகிய ஒழுங்கு, வளம், அழகியல், உரிமை என்னும் அறம் பொருளின்ப வீட்டு நிலைகளைப் பொதுமக்களுக்கு மிகவும் ஒழுங்காக எடுத்துச் சொல்லுவது.

திருவள்ளுவர் செய்த இத்தகைய உதவி, மழை செய்யும் உதவியே எனலாம். கைம்மாறு கருதாமல் பேதம் நினையாமல், கருத்துலகிலும் பொருளுலகிலும் தேவைக்கு உதவுவன இவ்விரண்டும்; இவற்றிற்கு உலகம் எதிர் நன்றி யாது செய்யும்! வாழி திருக்குறள்! வாழி வான் மழை! இவற்றின் உதவியால் வாழி உலகம்!

—நக்கீரர்.

மக்கள் தன்மைக்கு மேற்பட்ட ஒரு பெரு வல்லமையைச் சார்ந்து, திருவள்ளுவர் அத் தெய்வ வல்லமையால் நமக்குத் திருக்குறள் மறை வழங்கியிருக்கின்ருர். அறத்தின் இயல்பும் பொருளின் திறமும் இன்பத்தின் தன்மையும் வீட்டின் மாட்சியும் ஐயங்

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

8-ம் ஆண்டுக் கையொப்பம்
(28-10-55 முதல்)

உள்நாடு	ரூ.	4 0 0
வெளி நாடு	ரூ.	6 0 0
தனித் தாள்	ரூ.	0 1 0
ஆயுள்— கையொப்பம்	ரூ.	100 0 0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்;
மதுராந்தகம் P. O.
(தென்னிந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா"
—புறநானூறு.

கிளை 8	மன்மத, ஐப்பசி, 11-11-55 வெள்ளி.	தளிர் 3

சான்றோர் இயக்கம்

நாட்டுக்கு ஆக்கமான கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் நாட்டுமக்கள் எல்லாரும் அறியவும் பெறவும் செய்யவும் ஊக்கங் கொடுத்து இயங்கவைக்கும் அமைப்புகள், 'இயக்கம்' என்னும் பெயரால் வழங்கப் பெற்று வருகின்றன. தலைமக்கள் ஏனைப் பொதுமக்களுக்குச் செய்யும் நற்செய்கையே இது.

இப்போதுள்ள இயக்கங்கள் பெரும்பாலும் அரசியலின் பொருட்டு நடைபெறுகின்றன: அரசியல் என்பது இப்போது பலருங் கருதுகின்றபடி, திருவள்ளுவரின் பொருட்பாலைப் பற்றியதாய் இருக்கின்றது; பொருட்பாலைக்கூட முற்றும் பற்றியதாய் இல்லை; அரசியல் அங்கவியல் ஒழிபியல் என்று பொருட்பாலில் வரும் மூன்று பிரிவுகளில், அரசியல் அங்கவியல் என்னும் இரு பிரிவுகளை மட்டும் பற்றியதென்றும், அதுகூட இல்லை, அங்கவியல் ஒன்றைத்தான் பற்றியது என்றும் சொல்ல இடமிருக்கின்றது.

அரசியலின் நோக்கம் ஒரு பக்கம் இப்படிக் குறுகிச் சென்றால், இன்னொரு பக்கம், அதாவது செய்கைத் திட்டங்களின் வகை, ஒரு வரையறை யில்லாமலே செல்கின்றது. நாட்டின் தொழில்கள் வாணிபங்கள் முதலியவை யெல்லாம் அரசினர் செய்கைகளாகப் பெருகிக்கொண் டிருக்கின்றன.

இதனால் இக்கால அரசியல் இயக்கங்களின் கடமைகள் இன்னவைதாம் என்று திட்டமாகத் துணியமுடியாதபடி உள்ளன. மக்கள் ஆட்சியே நாடுகளில் வலுத்து வருவதால், மக்களுக்குரிய எல்லாத் தேவைகளையும் ஒழுங்கு செய்து தருவது ஆட்சியின் கடமையே என்று இரு பக்கமும் கருத்திருக்கின்றது.

இந்நிலையில் உலகத் தலைவராகிய இந்நாட்டுத் திருவள்ளுவர் போன்றார் கருத்துக்கள் எப்படி இருக்கின்றன என்று நோக்குதல், தக்க முடிவு ஒன்றுக்கு வர இணக்கமாய் இருக்கும்.

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளின் பொருட்பால், அரசனுக்குரிய கடமைகளை 'அரசியல்' என்னும் பிரிவிலும், அமைச்சர் முதலியோர்க்குரிய கடமைகளை 'அங்கவியல்' என்னும் பிரிவிலும் குடிமக்களுக்குரிய கடமைகளை 'ஒழிபியல்' என்னும் பிரிவிலும் சிறப்பாக வைத்து விளக்குகின்றது.

திருக்குறளிலுள்ள எல்லா அதிகாரங்களும் மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவர்க்கும் பொதுவாக உரியனவே என்றாலும், அவரவர்க்கு இயற்கையிலும் செயற்கையிலும் அமையும் பல்வேறு நிலைகளுக்குத் தக்கபடி பல்வேறு அதிகாரங்கள் சிறப்பின் உரியனவாயிருக்கின்றன.

அரசனுக்குக் 'காவலன்' என்று ஒரு பெயர் உண்டு. மக்கள் அவரவர் நிலையில் தத்தம் செயல்களில் ஈடுபட்டு நிற்க, அவர்களுக்கு உட்பகை வெளிப்பகைகளால் இடையூறு உண்டாகாதபடி அறம் காவல் செய்வது காவலன் கடமை; இக் கடமை அறநெறி பிறழாமல் நடைபெற வேண்டும்; அதனால், ஆட்சிக்குச் 'செங்கோல்' என்றும் பெயர். எங்கும் முறை காத்து நிற்பதே 'காவல்' என்பது;

"முறை செய்து காப்பாற்றும்
மன்னவன், மக்கட்கு
இறை என்று வைக்கப்படும்"

இந்த ஒரே கடமைதான் அரசினர் கடமை.

"நல்நடை நல்கல்
வேந்தற்குக் கடனே"

என்று புறநானூற்றிலும், குடிமக்களுக்கு நல்ல நடத்தையை உண்டுபண்ணுதலே அரசனுக்குக் கடமை என்று, அவனுக்குக் குடிமக்கள் தொடர்பாக உள்ள ஒரே கடமை நன்கு வலியுறுத்தப்பட்டது.

ஆகவே அரசியல் இயக்கம் என்பது நாட்டில் அறநெறி காத்து நிற்குங் காவலையல்லது வேறு இல்லை; எது அறநெறி என்பதைச் சான்றோர் வகுத்துக் கொடுப்பர்; அரசியல் அதனைக் காவல் செய்தலொன்றே கடவது.

நெடுமால் குறள்வடிவு கொண்டது வஞ்சனை, பின் நெடுவடிவில் நிமிர்ந்ததும் வஞ்சனை; நேர்மையில்லை; ஏனோ அப்படியாயிற்று; திருக்குறள் நூல், வஞ்சித்து வந்த குறள்வடி வன்று; பின் வஞ்சித்து நிமிர்ந்த நெடுவடிவுங் கொள்ள வில்லை; நூல் போல் நேர்மையும் முறைமையும் உடையது.

மாயவன் குறள் வடிவம், அருவருப்புடையது; பின் எடுத்த நெடுவடிவம் அச்சமுடையது; திருக்குறளின் சிறுவடிவம் இயல்பான குழந்தை வடிவம்; எளிமையும் இனிமையுமாய் உலகில் விளையாடி, எல்லாரையும் வஞ்சியாது இன்புறுத்தி வருகின்றது.

மாலவன் எடுத்த குறள்வடிவு, உருவமாகிய வரி வடிவு. ஆனால் திருக்குறள் எடுத்த குறள்வடிவோ வரிவடிவும் ஒலிவடிவும் உடையது. வரிவடிவு மண்ணின் சார்பில் நிற்பது;ஒலி,வானின் நிகழ்ச்சி; வானில் நிற்பது. ஆதலால், வரி ஒலி என்னும் இரண்டு வடிவங்களும் ஒருங்கே உடைய திருக்குறள் மண்ணில் நின்றும் வானில் நின்றும் இயங்க வல்லது.

திருமாலின் குறள் வடிவு மறைந்து விட்டது போல் திருக்குறள் மறைந்து விடுதலுமில்லை, மாறி விடுதலு மில்லை; என்றும் அழியாது நின்று உதவும் இனிமையும் எழிலும் அமைந்தது; வரி வடிவில் மண்ணில் நிலைத்து நின்றும், ஒலி வடிவில் விண்ணில் நிலைத்து நின்றும் எல்லாருள்ளங்களையும் காண வல்லது!

திருவள்ளுவர் குறள், உலகை,நூல் ஒழுங்குடன் அளந்தது; திருமாலின் குறள் வடிவு அளந்தது,

இத்தகைய பெரிய நூலைத் தமிழ், உலகுக்குத் தந்தது, தமிழுக்கு அப் பண்பினிமை இருக்கின்றது!

மேலும், களங்கமற்றதும், கட்டுத் திட்டமானதும், நேர்மையுடையதும், சுருங்கிய வடிவமைந்தது மான வெண்குறள் யாப்பில் அது, அமைந்திருப்பது வியப்பிற்குரியது; இலக்கிய அழகிற்குரியது. மக்கள் தம் கையாலும் நெஞ்சாலும் பழகிக் கையாளுவதற்கு மிகவும் எளியது.

அதுமட்டுமா? வாழ்க்கையின் அடிப்படைப் பகுதிகளும் தேவைகளுமாகிய ஒழுங்கு, வளம், அழகியல், உரிமை என்னும் அறம் பொருளின்ப வீட்டு நிலைகளைப் பொதுமக்களுக்கு மிகவும் ஒழுங்காக எடுத்துச் சொல்லுவது.

திருவள்ளுவர் செய்த இத்தகைய உதவி, மழை செய்யும் உதவியே எனலாம். கைம்மாறு கருதாமல் பேதம் நினையாமல், கருத்துலகிலும் பொருளுலகிலும் தேவைக்கு உதவுவன இவ்விரண்டும்; இவற்றிற்கு உலகம் எதிர் நன்றி யாது செய்யும்! வாழி திருக்குறள்! வாழி வான் மழை! இவற்றின் உதவியால் வாழி உலகம்!

—நக்கீரர்.

மக்கள் தன்மைக்கு மேற்பட்ட ஒரு பெரு வல்லமையைச் சார்ந்து, திருவள்ளுவர் அத் தெய்வ வல்லமையால் நமக்குத் திருக்குறள் மறை வழங்கியிருக்கின்றார். அறத்தின் இயல்பும் பொருளின் திறமும் இன்பத்தின் தன்மையும் வீட்டின் மாட்சியும் ஐயந்

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

8-ம் ஆண்டுக் கைஒப்பம்
(28-10-55 முதல்)

உள்நாடு	ரூ.	4 0 0
வெளி நாடு	ரூ.	6 0 0
தனித் தாள்	ரூ.	0 1 0
ஆயுள்—		
கையொப்பம்	ரூ.	100 0 0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்;
மதுராந்தகம் P. O.
(தென்னிந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா"
—புறநானூறு.

கிளை	மன்மத, ஐப்பசி,	தளிர்
8	11-11-55 வெள்ளி.	3

சான்றோர் இயக்கம்

நாட்டுக்கு ஆக்கமான கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் நாட்டுமக்கள் எல்லாரும் அறியவும் பெறவும் செய்யவும் ஊக்கங் கொடுத்து இயங்கவைக்கும் அமைப்புகள், 'இயக்கம்' என்னும் பெயரால் வழங்கப் பெற்று வருகின்றன. தலைமக்கள் ஏனைப் பொதுமக்களுக்குச் செய்யும் நற்செய்கையே இது.

இப்போதுள்ள இயக்கங்கள் பெரும்பாலும் அரசியலின் பொருட்டு நடைபெறுகின்றன: அரசியல் என்பது இப்போது பலருங் கருதுகின்றபடி, திருவள்ளுவரின் பொருட்பாலைப் பற்றியதாய் இருக்கின்றது; பொருட்பாலைக்கூட முற்றும் பற்றியதாய் இல்லை; அரசியல் அங்கவியல் ஒழிபியல் என்று பொருட்பாலில் வரும் மூன்று பிரிவுகளில், அரசியல் அங்கவியல் என்னும் இரு பிரிவுகளை மட்டும் பற்றிய தென்றும், அதுகூட இல்லை, அங்கவியல் ஒன்றைத்தான் பற்றியது என்றும் சொல்ல இடமிருக்கின்றது.

அரசியலின் நோக்கம் ஒரு பக்கம் இப்படிக் குறுகிச் சென்றால், இன்னொரு பக்கம், அதாவது செய்கைத் திட்டங்களின் வகை, ஒரு வரையறை யில்லாமலே செல்கின்றது. நாட்டின் தொழில்கள் வாணிபங்கள் முதலியவை யெல்லாம் அரசினர் செய்கைகளாகப் பெருகிக்கொண் டிருக்கின்றன.

இதனால் இக்கால அரசியல் இயக்கங்களின் கடமைகள் இன்னவைதாம் என்று திட்டமாகத் துணியமுடியாதபடி உள்ளன. மக்கள் ஆட்சியே நாடுகளில் வலுத்து வருவதால், மக்களுக்குரிய எல்லாத் தேவைகளையும் ஒழுங்கு செய்து தருவது ஆட்சியின் கடமையே என்று இரு பக்கமும் கருத்திருக்கின்றது.

இந்நிலையில் உலகத் தலைவராகிய இந்நாட்டுத் திருவள்ளுவர் போன்றார் கருத்துக்கள் எப்படி இருக்கின்றன என்று நோக்குதல், தக்க முடிவு ஒன்றுக்கு வர இணக்கமாய் இருக்கும்.

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளின் பொருட்பால், அரசனுக்குரிய கடமைகளை 'அரசியல்' என்னும் பிரிவிலும், அமைச்சர் முதலியோர்க்குரிய கடமைகளை 'அங்கவியல்' என்னும் பிரிவிலும் குடிமக்களுக்குரிய கடமைகளை 'ஒழிபியல்' என்னும் பிரிவிலும் சிறப்பாக வைத்து விளக்குகின்றது.

திருக்குறளிலுள்ள எல்லா அதிகாரங்களும் மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவர்க்கும் பொதுவாக உரியனவே என்றாலும், அவரவர்க்கு இயற்கையிலும் செயற்கையிலும் அமையும் பல்வேறு நிலைகளுக்குத் தக்கபடி பல்வேறு அதிகாரங்கள் சிறப்பின் உரியனவாயிருக்கின்றன.

அரசனுக்குக் 'காவலன்' என்று ஒரு பெயர் உண்டு. மக்கள் அவரவர் நிலையில் தத்தம் செயல்களில் ஈடுபட்டு நிற்க, அவர்களுக்கு உட்பகை வெளிப்பகைகளால் இடையூறு உண்டாகாதபடி அறம் காவல் செய்வது காவலன் கடமை; இக் கடமை அறநெறி பிறழாமல் நடைபெற வேண்டும்; அதனால், ஆட்சிக்குச் 'செங்கோல்' என்றும் பெயர். எங்கும் முறை காத்து நிற்பதே 'காவல்' என்பது;

"முறை செய்து காப்பாற்றும்
மன்னவன், மக்கட்கு
இறை என்று வைக்கப்படும்"

இந்த ஒரே கடமைதான் அரசினர் கடமை.

"நல்நடை நல்கல்
வேந்தற்குக் கடனே"

என்று புறநானூற்றிலும், குடிமக்களுக்கு நல்ல நடத்தையை உண்டுபண்ணுதலே அரசனுக்குக் கடமை என்று, அவனுக்குக் குடிமக்கள் தொடர்பாக உள்ள ஒரே கடமை நன்கு வலியுறுத்தப்பட்டது.

ஆகவே அரசியல் இயக்கம் என்பது நாட்டில் அறநெறி காத்து நிற்குங் காவலேயல்லது வேறு இல்லை; எது அறநெறி என்பதைச் சான்றோர் வகுத்துக் கொடுப்பர்; அரசியல் அதனைக் காவல் செய்தலொன்றே கடவது.

நெடுமால் குறள்வடிவு கொண்டது வஞ்சனை, பின் நெடுவடிவில் நிமிர்ந்ததும் வஞ்சனை; நேர்மையில்லை; ஏனோ அப்படியாயிற்று; திருக்குறள் நூல், வஞ்சித்து வந்த குறள்வடிவன்று; பின் வஞ்சித்து நிமிர்ந்த நெடுவடிவுங் கொள்ளவில்லை; நூல் போல் நேர்மையும் முறைமையும் உடையது.

மாயவன் குறள் வடிவம், அருவருப்புடையது; பின் எடுத்த நெடுவடிவம் அச்சமுடையது; திருக்குறளின் சிறுவடிவம் இயல்பான குழந்தை வடிவம்; எளிமையும் இனிமையுமாய் உலகில் விளையாடி, எல்லாரையும் வஞ்சியாது இன்புறுத்தி வருகின்றது.

மாலவன் எடுத்த குறள்வடிவு, உருவமாகிய வரிவடிவு. ஆனால் திருக்குறள் எடுத்த குறள்வடிவோ வரிவடிவும் ஒலிவடிவும் உடையது. வரிவடிவு மண்ணின் சார்பில் நிற்பது;ஒலி,வானின் நிகழ்ச்சி; வானில் நிற்பது. ஆதலால், வரி ஒலி என்னும் இரண்டு வடிவங்களும் ஒருங்கே உடைய திருக்குறள் மண்ணில் நின்றும் வானில் நின்றும் இயங்க வல்லது.

திருமாலின் குறள் வடிவு மறைந்து விட்டது போல் திருக்குறள் மறைந்து விடுதலுமில்லை, மாறி விடுதலு மில்லை; என்றும் அழியாது நின்று உதவும் இனிமையும் எழிலும் அமைந்தது; வரி வடிவில் மண்ணில் நிலைத்து நின்றும், ஒலி வடிவில் விண்ணில் நிலைத்து நின்றும் எல்லாருள்ளங்களையும் காண வல்லது!

திருவள்ளுவர் குறள், உலகை, நூல் ஒழுங்குடன் அளந்தது; திருமாலின் குறள் வடிவு அளந்தது,

இத்தகைய பெரிய நூலைத் தமிழ், உலகுக்குத் தந்தது, தமிழுக்கு அப் பண்பினிமை இருக்கின்றது!

மேலும், களங்கமற்றதும், கட்டுத் திட்டமானதும், நேர்மையுடையதும், சுருங்கிய வடிவமைந்தது மான வெண்குறள் யாப்பில் அது, அமைந்திருப்பது வியப்பிற்குரியது; இலக்கிய அழகிற்குரியது. மக்கள் தம் கையாலும் நெஞ்சாலும் பழகிக் கையாளுவதற்கு மிகவும் எளியது.

அதுமட்டுமா? வாழ்க்கையின் அடிப்படைப் பகுதிகளும் தேவைகளுமாகிய ஒழுங்கு, வளம், அழகியல், உரிமை என்னும் அறம் பொருளின்ப வீட்டு நிலைகளைப் பொதுமக்களுக்கு மிகவும் ஒழுங்காக எடுத்துச் சொல்லுவது.

திருவள்ளுவர் செய்த இத்தகைய உதவி, மழை செய்யும் உதவியே எனலாம். கைம்மாறு கருதாமல் பேதம் நினையாமல், கருத்துலகிலும் பொருளுலகிலும் தேவைக்கு உதவுவன இவ்விரண்டும்; இவற்றிற்கு உலகம் எதிர் நன்றி யாது செய்யும்! வாழி திருக்குறள்! வாழி வான் மழை! இவற்றின் உதவியால் வாழி உலகம்!

—நக்கீரர்.

மக்கள் தன்மைக்கு மேற்பட்ட ஒரு பெரு வல்லமையைச் சார்ந்து, திருவள்ளுவர் அத் தெய்வ வல்லமையால் நமக்குத் திருக்குறள் மறை வழங்கியிருக்கின்றார். அறத்தின் இயல்பும் பொருளின் திறமும் இன்பத்தின் தன்மையும் வீட்டின் மாட்சியும் ஐயங்

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

8-ம் ஆண்டுக் கையொப்பம்
(28-10-55 முதல்)

உள்நாடு	ரூ.	4	0	0
வெளிநாடு	ரூ.	6	0	0
தனித் தாள்	ரூ.	0	1	0
ஆயுள்— கையொப்பம்	ரூ.	100	0	0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்;
மதுராந்தகம் P. O.
(தென்னிந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா"
—புறநானூறு.

கிளை 8	மன்மத, ஐப்பசி, 11-11-55 வெள்ளி.	தளிர் 3

சான்றோர் இயக்கம்

நாட்டுக்கு ஆக்கமான கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் நாட்டுமக்கள் எல்லாரும் அறியவும் பெறவும் செய்யவும் ஊக்கங் கொடுத்து இயங்கவைக்கும் அமைப்புகள், 'இயக்கம்' என்னும் பெயரால் வழங்கப் பெற்று வருகின்றன. தலைமக்கள் ஏனைப் பொதுமக்களுக்குச் செய்யும் நற்செய்கையே இது.

இப்போதுள்ள இயக்கங்கள் பெரும்பாலும் அரசியலின் பொருட்டு நடைபெறுகின்றன: அரசியல் என்பது இப்போது பலருங் கருதுகின்றபடி, திருவள்ளுவரின் பொருட்பாலைப் பற்றியதாய் இருக்கின்றது; பொருட்பாலைக்கூட முற்றும் பற்றியதாய் இல்லை; அரசியல் அங்கவியல் ஒழிபியல் என்று பொருட்பாலில் வரும் மூன்று பிரிவுகளில், அரசியல் அங்கவியல் என்னும் இரு பிரிவுகளை மட்டும் பற்றியதென்றும், அதுகூட இல்லை, அங்கவியல் ஒன்றைத்தான் பற்றியது என்றும் சொல்ல இடமிருக்கின்றது.

அரசியலின் நோக்கம் ஒரு பக்கம் இப்படிக் குறுகிச் சென்றால், இன்னொரு பக்கம், அதாவது செய்கைத் திட்டங்களின் வகை, ஒரு வரையறை யில்லாமலே செல்கின்றது. நாட்டின் தொழில்கள் வாணிபங்கள் முதலியவை யெல்லாம் அரசினர் செய்கைகளாகப் பெருகிக்கொண் டிருக்கின்றன.

இதனால் இக்கால அரசியல் இயக்கங்களின் கடமைகள் இன்னவைதாம் என்று திட்டமாகத் துணியமுடியாதபடி உள்ளன. மக்கள் ஆட்சியே நாடுகளில் வலுத்து வருவதால், மக்களுக்குரிய எல்லாத் தேவைகளையும் ஒழுங்கு செய்து தருவது ஆட்சியின் கடமையே என்று இரு பக்கமும் கருத்திருக்கின்றது.

இந்நிலையில் உலகத் தலைவராகிய இந்நாட்டுத் திருவள்ளுவர் போன்றோர் கருத்துக்கள் எப்படி இருக்கின்றன என்று நோக்குதல், தக்க முடிவு ஒன்றுக்கு வர இணக்கமாய் இருக்கும்.

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளின் பொருட்பால், அரசனுக்குரிய கடமைகளை 'அரசியல்' என்னும் பிரிவிலும், அமைச்சர் முதலியோர்க்குரிய கடமைகளை 'அங்கவியல்' என்னும் பிரிவிலும் குடிமக்களுக்குரிய கடமைகளை 'ஒழிபியல்' என்னும் பிரிவிலும் சிறப்பாக வைத்து விளக்குகின்றது.

திருக்குறளிலுள்ள எல்லா அதிகாரங்களும் மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவர்க்கும் பொதுவாக உரியனவே என்றாலும், அவரவர்க்கு இயற்கையிலும் செயற்கையிலும் அமையும் பல்வேறு நிலைகளுக்குத் தக்கபடி பல்வேறு அதிகாரங்கள் சிறப்பின் உரியனவாயிருக்கின்றன.

அரசனுக்குக் 'காவலன்' என்று ஒரு பெயர் உண்டு. மக்கள் அவரவர் நிலையில் தத்தம் செயல்களில் ஈடுபட்டு நிற்க, அவர்களுக்கு உட்பகை வெளிப்பகைகளால் இடையூறு உண்டாகாதபடி அறம் காவல் செய்வது காவலன் கடமை; இக் கடமை அறநெறி பிறழாமல் நடைபெற வேண்டும்; அதனால், ஆட்சிக்குச் 'செங்கோல்' என்றும் பெயர். எங்கும் முறை காத்து நிற்பதே 'காவல்' என்பது;

"முறை செய்து காப்பாற்றும்
மன்னவன், மக்கட்கு
இறை என்று வைக்கப்படும்"

இந்த ஒரே கடமைதான் அரசினர் கடமை.

"நல்நடை நல்கல்
வேந்தற்குக் கடனே"

என்று புறநானூற்றிலும், குடிமக்களுக்கு நல்ல நடத்தையை உண்டுபண்ணுதலே அரசனுக்குக் கடமை என்று, அவனுக்குக் குடிமக்கள் தொடர்பாக உள்ள ஒரே கடமை நன்கு வலியுறுத்தப்பட்டது.

ஆகவே அரசியல் இயக்கம் என்பது நாட்டில் அறநெறி காத்து நிற்குங் காவலேயல்லது வேறு இல்லை; எது அறநெறி என்பதைச் சான்றோர் வகுத்துக் கொடுப்பர்; அரசியல் அதனைக் காவல் செய்தலொன்றே கடவது.